# கண்ணிவெடி கவனம்
Mind the mines

**கண்ணிவெடிகள் குறித்து விழிப்புடன் இருங்கள்**

மீண்டும் வாழ்வோம்

அசாதாரண சூழ்நிலைகளால் இடம்பெயர்ந்த மக்களுக்காக செய்திப்பத்திரிகை, வானொலி ஊடாக மனிதாபிமான தகவல்களை வழங்கிவரும் "மீண்டும் வாழ்வோம்", செயற்றிட்டமானது, இவ்வாரம் தொடக்கம் இலங்கை அரசாங்கம், யுனிசெப், ஐரோப்பிய ஒன்றியம் என்பவற்றோடு இணைந்து கண்ணிவெடி கவனம் என்ற விழிப்புணர்வு பிரச்சாரத்தை முன்னெடுத்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு மிதிவெடிகள் மிகப்பெரும் சவாலாக விளங்குகின்றன.

இலங்கையின் யுத்தம் நடைபெற்ற பகுதிகளில் சுமார் 1.5 மில்லியன் மிதிவெடிகளும் வெடிக்காத பொருட்களும் சுமார் 40 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் பரவிக் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் சுமார் 70 வீதமான மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் மீள்குடியேறும் மக்கள் மிதி வெடிகள் மற்றும் வெடிக்காத பொருட்கள் குறித்து அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று அனைத்து தரப்பினரும் அறிவுறுத்தி வருகின்றனர்.

இதில் உள்ளடக்கப்படும் விடயங்கள் உங்கள் பாதுகாப்பை நோக்காகக் கொண்டவை. எனவே 'விழிப்போடு இருப்போம் , வருமுன் காப்போம்'

இந்தப் பரப்புரைத் திட்டம் உங்களிடம் இருந்தும் கருத்துகளை எதிர்பார்க்கின்றது. கண்ணிவெடிகள் தொடர்பான விழிப்புணர்வு திட்டம் எவ்வாறு உங்கள் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தியது என்பது குறித்து எங்களுக்கு எழுதி அனுப்புங்கள்.

மீண்டும் வாழ்வோம்
த.பெ. இல:1039, கொழும்பு

கண்ணிவெடி ஒன்றினை கொள்வனவு செய்வதற்கான செலவு
**ரூ.350 - ரூ.1,200 வரை**

ஒரு கண்ணிவெடியை அகற்றுவதற்கான செலவு
**ரூ.35,000-ரூ.115,000 வரை**

**மிதிவெடிகளால் அதிகம் சிறுவர்களே பாதிக்கப்படுகிறார்கள்.**



சிறுவர்கள் மீதான யுத்தத்தின் தாக்கம் பற்றிய ஐ.நா.வின் விசேட அறிக்கை

## அன்பார்ந்த மக்களே....

**கடந்த கால யுத்தத்தின் விளைவாக எமது பிரதேசமானது மிதிவெடிகளாலும் யுத்த வெடிபொருட்களாலும் சூழப்பட்டிருப்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். இவைகள் மிகவும் ஆபத்தானவை. ஊனங்களை கொல்லவோ அல்லது அங்கவீனமாக்கவோ கூடியவை. இவற்றின் பாதிப்பிலிருந்து எம்மையும் எமது குழந்தைகளையும் உறவினர்களையும்** பாதுகாக்க சில வழிகள்.



வெடிபொருட்களின் ஆபத்துக்கள் பற்றி ஏனையவர்களுக்கும் தெரியப்படுத்துவோம்.




எச்சரிக்கை அடையாளமிடப்பட்டுள்ள இடங்களுக்குள் செல்வதைத் தவிர்ப்போம்.




வெடிக்காத நிலையிலுள்ள வெடிபொருட்கள் மிகவும் ஆபத்தானவை! அருகில் செல்வதைத் தவிருங்கள்!!

பாதையின் இருமருங்கிலும் மிதிவெடி அபாயமிருக்கும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். பாதையை விட்டு விலகிச் செல்லாதிருப்போம்.

பாதுகாப்பானது என உறுதிப்படுத்தப்பட்ட பாதைகளை மட்டும் பயன்படுத்துவோம்.

கால் நடைகள் ஆபத்தான பிரதேசங்களுக்குள் செல்லவிடாது பாதுகாத்துக் கொள்ளுவோம்.

ஆபத்தான பகுதிகளென சந்தேகிக்கப்படும் பகுதிகளுக்குள் செல்லாதிருப்போம்.

### சந்தேகத்திற்கிடமான பொருட்களைக் கண்டால் பின்வரும் நிறுவனம் ஒன்றிற்கு அறிவிப்போம்.

| வவுனியா மாவட்டம் | மன்னார் மாவட்டம் |
|---|---|
| CTF: 024 222 1127 | CTF: 023 222 2501 |
| DMAO: 024 222 4214 | DMAO: 023 222 2235 |
| SLA: 011 306 1231 | SLA: 011 306 1231 |
| MAG: 024 3243451 | MAG: 023 224 3451 |
| Sarvatra: 024 492 0206 | Sarvatra: 024 492 0206 |
| Horizon: 024 224 8150 | Horizon: 023 223 3055 |

FSD: 024 458 9059 / 024 222 0052 / 024 324 5737

DDG: 024 324 8214

UNICEF: 024 222 3485

யாழ்ப்பாணம் மாவட்டம்
The Halo Trust:
021 320 5339

தங்கள் பகுதியிலுள்ள கிராம சேவை அலுவலர், பாதுகாப்புப் படையினர் ஆகியோருக்கும் தெரியப்படுத்துங்கள்



கண்ணிவெடி அகற்றலில் பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்கள் மாத்திரமே இவ்வாறான தேடுதல் செயன்முறைகளில் ஈடுபட முடியும்

விறகிற்காகவோ அல்லது நாளாந்த தேவைகளுக்காகவோ காட்டு பகுதிகளுக்குள் செல்வதை தவிர்ப்போம்.

# கண்ணிவெடி கவனம்
Mind the mines

**கண்ணிவெடிகள் குறித்து விழிப்புடன் இருங்கள்**

மீண்டும் வாழ்வோம்



மிதிவெடிகளும் வெடிக்காமல் எஞ்சியிருக்கும் யுத்த வெடிபொருட்களும் உண்டாக்கும் காயங்கள் குறித்த நபரை மட்டுமன்றி குடும்பத்தவரையும் அயலவர்களையும் பாதிக்கின்றன. பாதுகாப்பாய் இருங்கள்..!!



ஆபத்தான பிரதேசம் அங்கே போகாதீர்கள்!

நினைவில் கொள்ளுங்கள், உங்களாலும் பல உயிர்களை காப்பாற்ற உதவ முடியும்..!!

மிதிவெடி ஒன்றின் மீது கால் வைக்க நேர்ந்தால் உங்கள் பாதத்தையோ அல்லது காலையோ கூட இழக்க நேரிடலாம், அவதானமாயிருங்கள்..!!

## மிதி வெடியால் பாதிக்கப்பட்ட மக்கள்

*சு.சத்தியா*

மன்னார் மாவட்டத்தில் உள்ள அந்தோனிப்பிள்ளை கிங்ஸிலி நவநாயகம் கண்ணிவெடியின் தாக்கத்தினால் தனது இடது காலை இழந்தவர். தற்போது சமூக நம்பிக்கை நிதியம் எனப்படும் நிறுவனத்தின் மன்னார் மாவட்ட கிளையில் கடமைபுரிகின்றார். இவர், கண்ணிவெடியால் ஏற்படும் தாக்கங்கள் பற்றிய அனுபவங்களை எம்மோடு பகிர்ந்துகொண்டார்:



''நான் 1990ஆம் ஆண்டு வியாபாரம் நிமித்தமாக செல்லும் வழியில் இவ் அசம்பாவித சம்பவம் இடம்பெற்றது. ஏற்கனவே அப்பிரதேசத்தில் கண்ணிவெடிகளின் தாக்கம் காணப்படுவதாகவும் அவதானமாக இருக்க வேண்டுமெனவும் அங்குள்ள மக்கள் என்னிடம் அறிவுறுத்தினர். இருப்பினும் அப்போது எனக்கு கண்ணிவெடிகளின் தாக்கம் குறித்து பெரியளவிலான அறிவு இருக்கவில்லை. அதற்கு அடுத்த நாள் கடற்பகுதி ஓரமாக நானும் எனது வியாபார நண்பர்களும் நடந்து சென்றுகொண்டிருந்தோம். அச்சந்தர்ப்பத்தில் கண்ணிவெடி எதுவும் இங்கு கிடந்து வெடித்தால் பிரச்சினையாகிவிடும் என்று நான் எனது நண்பர்களிடம் கூறினேன். அதற்கு அவர்கள், 'நாங்கள் நேற்றும் இவ்வழியாகத்தான் சென்று வந்தோம் அதனால், பயப்படாமல் வா' என்றார்கள்.

> "திடீரென வெடிச்சத்தம் ஒன்று கேட்டது. அப்போதுதான் எனக்குத் தெரியும் என்னுடைய இடது காலை இழந்துவிட்டேன் என்று"

அப்போது நான் சற்று முன்னோக்கி நடந்துகொண்டிருந்தேன். திடீரென வெடிச்சத்தம் ஒன்று கேட்டது. என்ன நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை. கொஞ்ச நேரத்தில் எழும்புவதற்கு முயற்சித்தேன் அப்போதுதான் எனக்குத் தெரியும் என்னுடைய இடது காலை இழந்துவிட்டேன் என்று. பிறகு அந்த இடத்திலிருந்து எனது கால் பறிபோனதை நினைத்துக் கதறி அழுது கொண்டிருக்கும்போது என்னுடைய நண்பர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றனர்.

காலை இழந்தமையினால் ஆரம்பத்தில் மிகவும் கஷ்டப்பட்டேன். கால் இன்மையினால் அனைத்து தேவைகளுக்கும் இன்னொருவருடைய உதவியில் தங்கியிருக்க வேண்டும். எட்டு மாதத்திற்குப் பிறகு செயற்கைக் கால் பொருத்தப்பட்டது. அப்போதும் மிகவும் சிரமப்பட்டேன். பின்னர் எனது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களின் ஆறுதலினால் படிப்படியாக ஓரளவு மனதைத் திடப்படுத்திக்கொண்டேன்.

இத்தாக்கத்தினால் சமூகத்திலும் சில பிரச்சினைகளை சந்தித்திருக்கின்றேன். இவன் ஊனமுற்றவன் என்று பழிப்பார்கள். அந்த நேரத்தில் என்னையும் மீறி மிகவும் கோபம் வரும். பின்னர் அவர்கள் அறியாமல் கதைக்கின்றனர் என்று பெரிதாகக் கணக்கெடுப்பதில்லை.

தற்போது சமூக நம்பிக்கை நிதியத்துடன் இணைந்து கண்ணிவெடிகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை வழங்கி வருகின்றேன். உடம்பில் ஒரு அங்கத்தை இழந்து வாழ்வது எவ்வளவு கடினமானது என்பது எனக்குத் தெரியும். எனவே கண்ணிவெடிகளிலிருந்து பாதுகாப்பைப் பெறுவது அவசியம் என்பதை ஏனையோர்களுக்கு திடமாக வலியுறுத்தி வருகின்றேன்.

## கண்ணிவெடிகளின் உருவத்தோற்றங்கள்









**ஐக்கிய நாடுகளின் சிறுவர்களுக்கான நிதியத்தில் கண்ணிவெடி அபாயக் கல்வியின் திட்ட உதவியாளராக கடமையாற்றும் மிஹிலார் மொஹமட் கண்ணிவெடிகள் எவ்வாறு தோற்றமளிக்கும் என்பது குறித்து தெரிவிக்கின்றார்.**

பொதுவாக கண்ணிவெடிகள் எப்போதும் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் அல்லது உருமாற்றப்பட்ட நிலையில் அதனுடைய சூழலுக்கு அமைவாகக் காணப்படும். அதிகமான சந்தர்ப்பங்களில் நிலத்திற்கு அடியில் புதைக்கப்பட்டிருக்கலாம். இவை மரம், பிளாஸ்ரிக், இரும்பாலான பொருட்கள் ஆகியவற்றினால் உருவாக்கப்பட்டிருக்கலாம். பல நிறங்களிலும் இவை காணப்படுகின்றன. பச்சை, கறுப்பு, மண் நிறம், ஒலிவ் நிறம் ஆகியவற்றினால் உருவாக்கப்பட்டிருக்கும். உருளை, செவ்வகம், வட்டம், சதுரம் போன்ற வடிவங்களாலும் இவை ஆக்கப்பட்டிருக்கும்.

**படத்திலுள்ளது போன்ற சிறியரக மிதிவெடிகள் ஒருவரின் பாதத்தை பறித்துவிடக்கூடியளவு அபாயமானவை. இவற்றை அடையாளம் காண்பது மிகவும் சிரமமானது. கண்ணுக்குப் புலப்படாமல் பற்றைக்குள் கிடக்கும் இவ்விதமான மிதிவெடியொன்றின் சாதாரணத் தோற்றம் கீழே:**







நீங்கள் குடியமரப்போகுமிடம் கண்ணிவெடியற்ற பாதுகாப்பான பிரதேசமா என்பதனை உறுதிப்படுத்த உங்கள் கிராமசேவையாளர் அல்லது பிரதேச செயலகம் அல்லது கண்ணிவெடி செயற்பாட்டு அலுவலகத்தினை நாடுங்கள். அதிகாரிகளால் பாதுகாப்பான பிரதேசமென உறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே அவ்விடங்களில் மீளக்குடியமருங்கள்.

### மீண்டும் வாழ்வோம் உங்களுக்கான தகவல் ஊடகம்

உங்கள் வாழ்நிலையை மேம்படுத்தக் கூடிய மனிதாபிமானப் பணிகள் தொடர்பான செய்திகளை ''மீண்டும் வாழ்வோம்'' வாராந்தத் தகவல் இதழ் உங்கள் நலன்பொருட்டு இலவசமாக வெளியிடுகிறது.

''மீண்டும் வாழ்வோம்'' வானொலி நிகழ்ச்சி இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையில் திங்கள் முதல் வெள்ளிவரை இரவு 9.30 முதல் 10.00மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எப்.எம்.வானொலியில் ஞாயிற்றுக் கிழமைகளில் பிற்பகல் 1.30 மணி முதல் 2.00 மணிவரையும் ஒலிபரப்பாகிறது. எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளையும் இப்பத்திரிகையையும்:

- **''மீண்டும் வாழ்வோம்'' தகவல் இதழ் உங்கள் பிரதேசத்தில் கிடைப்பதை நீங்கள் விரும்புகிறீர்களா?**
- **எமது செய்தி ஊடகத்துக்குப் பங்களிக்க விரும்புகிறீர்களா?**
- **எவ்விதமான தகவல்கள் இடம்பெற வேண்டுமென விரும்புகிறீர்கள்?**
- **உங்களது அபிப்பிராயங்களை எமக்கு எழுதுங்கள்...**

**முகவரி:**

மீண்டும் வாழ்வோம், த.பெ. இல:1039, கொழும்பு